









இருவர் உள்ளம்




pax.ravichandra@gmail.co

Pax Ravichandra

3-2-2024

இருவர் உள்ளம்

அமிர்தயோகம்-ஜஸ்டின்

வள்ளலாய் நின்றெனக்கு வாரி வாரி, வழங்கியதையெல்லாம்-
ஏழை உள்ளம்தான் மறக்குமோ?-குசேலனுக்கு
கண்ணனாய் கருணை புரிந்த தோழமையை கண்டே
உள்ளம் நெகிழ்ந்தேன்-பெருமானே
வாழி! வாழி! என்றே உங்களைப் புகழ்கின்றேன்



அன்பினால் என்னை ஆட்கொண்டு தந்தையானாய்
அறிவினால், ஆட்கொண்டு நான் வியக்கும்
சான்றோனாய், புனிதனாய் ஐயா நீ ஒளிர்ந்தாய்
என் வாழ்வை ஒளிர்வித்தாய்



கொடுத்துச் சிவந்த உன் கரங்களைப் பற்றிட
எனக்கும் வரமளித்தாய், தந்தையாய், நண்பனாய்
என் வாழ்வில் கலந்தே, அன்புத் தாரத்தையும்
தாயாய் எனக்களித்த வள்ளல்
உங்களைப்போல் உலகில் யாருமுண்டோ,

அன்பினால் இன்புற்றேன், நன்றி சொல்ல
மொழியின்றி நா தடுமாற-அன்பிறைவனை
வாழும் உங்களில் கண்டேன்
எல்லாப் புகழும் இறைவனுக்கென்றே
மனம் மகிழத் துதிக்கின்றேன்



தன் குஞ்சிற்கு உணவளிக்கும் தாயாய்
அன்பினால் என்னை இன்புற வைக்கும்
தெய்வங்கள் நீங்கள்-வாழ்க
பல்லாண்டு, பல்லாண்டு வாழ்கவே

எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
(லோக சமஸ்தா சுகினா பவந்து)
Pax Ravichandra-28-09-2023

அம்மன் தரிசனம்





இமயச் சோகத்தை இறக்கி வைக்க, அன்னையைத் தேடி
ஆலயம் போனேன், வாயிலில் இரந்து நின்ற
ஏழைகள் கூட்டம் , கண்கள் பனித்திட,
இருப்பதை பகிர்ந்து இன்புற்ற இதயம்

அம்மனுக்கு அலங்கார பூசை
அழகு பொங்கும் தாய்மையின் திருக்கோலம்
நெஞ்சுக்கு நிம்மதி தர, கண் கூப்பி , கரம் குவித்து
கண்ணீர் சுரக்க மெய் மறந்து நின்றேன்

அம்பிக்கையோ ஆழ்ந்த கருமை-நம் பாவக் கறையெல்லாம்-
தன் மெய்யில் சுமந்தாளோ மனம் கனக்க, மலர் மாலை
சூடிய மாதாவின் கோலத்தில் மனம் இலயிக்க-மகளே
நான் சூடப் பூவாய் மலரயோ கெஞ்சிடத் தடுமாறி நின்றேன்

வண்ணப் பட்டுடுத்தி வடிவாய் அலங்கரித்து
பொன்னணி பூண்டு-பொற்பீடத்தில் அமர்ந்து
புன்னகை எழில் வதனத்தில் மலர
எந்தாயின் அலங்காரத் தோற்றம்.

விழிப்புணர்வைக் காட்டும்- மீன் போன்று மூடாத விழிகளில்
அவளோ மீனாக்ஷி- மானுட காம (ஆசைகளை) தீர்த்து
உவகை கொள்ளும் தாய்மையில் அவளோ காமக்ஷி-
எங்கும் பரந்து எல்லாமுமானவளோ விசாலாட்சி
வணங்கி மனம் பூரிக்க இதயத்திலோ அமைதியின் ஆட்சி

என்னையே காணிக்கையாய் தந்தேன் அம்மா
ஏழையின் காணிக்கையை ஏற்பாய் அம்மா
மனம் கரைந்து மன்றாட-மணி யொலித்து-தீப
ஆராதனை முடித்து, அர்ச்சகர் காட்டிய தீபம்

ஆசை அவித்து, கற்பூரமாய் ஆணவம் எரித்து-
ஒளியாய் மாறு, அன்னை ஆசீர் வழங்கிட
தொட்டு கண்களில் ஒற்றி-தூயவளிடம்
அன்பை வேண்டிய குழந்தை நெஞ்சம்

புன்னகை பூத்த அர்ச்சகரோ பெரியாழ்வாராய்த் தோற்றம்-
என்னை ஆண்டாளாய் கண்டாரோ, நெற்றியில் நீறிட்டு
குங்கும், சந்தனம் தந்து மங்கலம் பொங்க- தந்தையாய்
ஆசீர் வழங்கிட-நீர் பூத்த விழிகள், கை கூப்பிய நெஞ்சம்

எல்லாம் இழந்தாலும் இறையே, உன்னைப் பிரியாத
மனம் வேண்டி பிரகாரத்தை சுற்றி வர-ஞானப்பழம
நாடி உலகு சுற்றிய குழந்தைகளாய் மானுடம்,



அம்மையப்பனை சுற்றி அருள் பெற்றவன்
திருவடி தொழுது, உலகை சுற்றியவன் தாள் பணிந்து
சுழலும் உலகில் வாழும் கணங்கள் எல்லாம்
தாயே உன் மடியில் தவழும் நினைவானது

மணி ஓசையின் அதிர்வு நாதப்பிரம்மாக
என்னுள் இன்னிசையின் அதிர்வுகள்
என்னை ஆட்கொள்ள எங்கும் இன்பமயம்

எல்லாம் இழந்தாலும் தாயே -என்றும்
உன்னைப் பிரியாத வரம் வேண்டும்,
மனம் வேண்டி பிரகாரத்தை சுற்றி வர
மனதிலே ஆனந்தம்,

பொன்னோ, பெரும் பொருளோ
பூவோ, பழமோ, என் அன்னை வேண்டுவது-
பொன்னுமில்லை, பொருளுமில்லை
பூவாய் பூத்து கனியாய் இனிக்கும் அன்பு மனமே
என் அன்னை வேண்டுவது



யாதுமாகி நின்றவள் எனை ஆட்கொள்ள
அம்மா என்று மனம் அமைதி கொள்ள
என்னே என் ஆனந்தம்.

எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
Pax Ravichandra-28-09-2023

அம்மா நீ பல்லாண்டு வாழ்க





ஆசானாய் கண்ட அம்மையோ கலைமகள்
அழகியாய் கண்ட பெண்மையோ திருமகள்
அன்பினால் என்னை இன்புற வைத்த
அன்னையோ உமையவள்

காலங்கள் பல கடந்து போயின
உறவுகள் பல வந்து பாச மழை பொழிந்தன
என் அன்பு உலகில் என்றும் இனியவளாய்
என் தாயாய் இறைவன் தந்த வரம் நீ அம்மா

மகனே என்றழைத்து மகிழ்வித்தாய்
என் சோகத்தில் கலங்கி- தாயாய்
என் கண்ணீர் துடைத்தாய்-கணவரையும்
தந்தையாய் எனக்களித்தாய்

இன்று உங்கள் பிறந்த நாள்-என்றும்
பூவும், பொட்டோடும், மங்கலம் நிலைக்க
வாழ்வெல்லாம் குதூகலம் பொங்க, பல்லாண்டு
பல்லாண்டு வாழ்க வாழ்த்துகிறேன் என் தாயே





வானூரும் நிலவும், தேனூறும் மலர்களும் சாட்சியாக
என் சித்தம், நினைப்பு, செய்கை உள்ளவரை
என் உள்ளம் உங்களை ஒரு போதும் மறவாது தாயே
இறைவனை உங்களுக்காய் வேண்ட மறவாது அன்னையே

பூ முகத்தில் புன்னகை என்றும் மலர்ந்திருக்க-தாய்
இதயத்தில் அன்பும், அமைதியும் என்றும் நிலைத்திருக்க
சச்சித் ஆனந்தமான வாழ்வு வரமாக
வாழ்த்தும் பிரிய மகன்





எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
(லோக சமஸ்தா சுகினா பவந்து)
Pax Ravichandra-11-09-2023

அவளும் நானும்

கண்டு விழிகளும் தேன் உண்ட வண்டாய்க் கிறங்க,
காதல், காதல் என்றே மனம் ரீங்காரம் இசைக்க
வண்ணப் பூவை வட்டமிட்டு குதூகலித்த கண்கள்
அண்ணலும் நோக்க-அவளும் நோக்க ஒன்றான மனங்கள்





கண்களினால் காதல் சொல்ல-நாணிப்
புன்னகை பூத்த கன்னி -நான் சூட
தன் மனதை காதலால் சூடிக்கொடுத்து-என்னை
காதலில் வீழ்த்திய ஆண்டாளாய்க் கன்னி

கன்னி மனம் கனிய-காதல் மனம்
பண் இசைக்க. ஜோடிக்குயில்களின் அமுதகானம்
விண்ணில் எதிரொலிக்க, வானவர் பொழிந்த
பூமழை-நெஞ்சத்திலோ காதல் மழை

வண்ணச் சேலை இதழ்களாய் மாறிட
வாசமுல்லை பொன்மேனி வாசமாய் மணந்திட
செவ்விதழ் "கள்" மலைத்தேனாய் இனித்திட
என்னைச் சூட புல்வெளியில் பூத்த பூவை



முத்துப் புன்னகை என்னை மயக்க-அழகோ பொன்மானனாய்
என்னை அலைக்கழிக்க, மனம் மயங்கி காதல் எனத் தவிக்க
மலராய்க் கார்குழலில் என்னைச் சூடி-குமுத வாயால்
காதல் அமுதைப் பருகிடத் தந்த பாவை

நூலிடை அசைய, நூபுரம் என்னை அழைக்க
பூங்குழல் மணக்க-கொலுசு மோகனம் இசைக்க
நாணிய அழகில் கம்பனின் மைதிலி-காதலில்
வீழ்த்திய கன்னியோ காளிதாஸின் சகுந்தலை

நாற்குணங்கள் பூத்த வண்ண மங்கை
மும்மகள்களும் ஒன்றான அழகு நங்கை
என் கைத்தலம் பற்றிய காதல் சீதை
நான் சூட தன்னைத் தந்த ஆண்டாளாய்க் கோதை

எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
Pax Ravichandra-28-09-2023

ஆயிரம் வாசல் இதயம்

அவள்




காதல் வேள்வியில் பூத்த பொன் மலர், குவளை விழிகளில்
மை சிரிக்க, பூங்குழலில் வாச நெய் மணக்க,
குமுதச் செவ்வாயில் அமுதம் இனிக்க, ஆடை மூடிய
அழகில் பாலாடை, அசைந்தாடும் தென்றலில்
இசைந்தாடும் பூங்கொடியில் வீசும் காதல் வாடை



நர்த்தனமாய் நடையும், கீர்த்தனமாய் கிள்ளை மொழியும்
சீதனமாய் கொண்டவள், அன்ன நடையோடு கொடியிடையும்
அசைந்தாட, **ஏழ்மைக் களை எடுக்க-செல்வரிடம்**
காமக்களை பிடுங்கும் காமினி

இசையோடு கைபேசி அழைக்க, இரவில் மலரும்
தேன் நிலவை மன்மத விருந்துக்கு காமன் அழைக்க,
பஞ்சணை மலராய் பூக்கும் பாவை, பாவ
புண்ணியம் தாண்டிய ஆதித்தொழிலாளியான பூவை



நெஞ்சினிக்க நேசம் சொல்லாமல், நிறை அழகை
ஏற்றிப் போற்றாமல், மஞ்சத்தில் கொஞ்சும் மன்மதன்
காமசூத்திரம் அறியாத காமச்செல்வன்

இதழ்களால் மெய்யில் கவிதை எழுதாமல், நுதலில்
ஒரு முத்தம் பதியாமல், அம்மணமான பொன் மேனிக்குள்
துடிக்கும் ஆன்மாவின் காதல் புரியாமல்,
மன்மதக் கலையின் மகத்துவம் புரியாத காமுகன்-

சீதனத்தில் வாங்கிய-மனைவி ஆடிக்கொரு தடவை
கொறிக்கும் நொருக்குத் தீனி-வாடகைக்கு எடுத்த
பூவையோ முக்கனியிலும் இனிய தேன்கனி

கனவும் காதலும்

காதல் கடலில் மூழ்கியபோது-உன் முத்தத்தால்
மூச்செடுத்தேன், செவ்வாயில் வாழ்வதென்பதை
உன் செவ்வாயில் அறிந்தேன்

அணைத்துக்கொள், என் உணர்வுகளை புரிந்து கொள்
பொன் மேனியை ஆடையாக்கி, என் பூவாசத்தை சுவாசமாக்கி
என் கனவுகளைத் தென்றலாக்கி, என் நரம்புகளை-யாழாய் மீட்டி
என் இதயத் துடிப்பின் இசையை கேள்
யாரும் நுழையாத இதயத்துள் நீ மட்டும் நுழைய


என் அந்தரங்கத்தின் கதவுகளை உனக்காய்த் திறந்து-
என்னையே உனக்கு நைவேத்தியமாய் படைக்கின்றேன்
சிவமாய் வா, சக்தி என்னை, உன்னில் ஒரு பாதியாக்கு



லிங்கமாய் நீ -யோனியாய் நான்
சிவசக்தியாய் நாம்-**காமமே படைத்தலில்**
கடவுளின் பொறிமுறைச் சூத்திரம்

என்னை முழுமையாய் காட்டிட-எனக்கு
காதல் சொன்னவர் யாருமில்லை
என்னை அம்மணமாய்ப் பார்த்தவர்களுக்கு
என் மனம் தெரியவில்லை-

காதலே, மனதோடு, உடலையும் காட்டும் கண்ணாடி-
அறிந்தே-உன்னைக் காதலனாய் தெரிந்தேன்



நெருக்கம் என்பது நெருங்கிடும் உடல்களில் இல்லை-
நுதலில் இடும் ஒரு முத்தம், இதழில் பதித்த
ஆயிரம் முத்தங்களைவிட இனிமையானது-
மென்மையானது கண்ணியமானது.

காதல் கண்ணியமான உறவின் தெரிவு
காதல் உண்மையைப் பகிரும் இன்ப உறவு
உடலும் ஆன்மாவும் சங்கமிக்கும் ஆனந்த நிகழ்வு

பெண்மையின் மனம் குளிர-ஆன்மா மலர
ஆண்மை இசைக்கும் சங்கீதம் காதல்,
முழுமையல்ல நான் அதனால் என்னை
முழுமையாய் பகிர்கின்றேன்



பகிர்தலே முழுமையாகும் வழி,
சத்தியம்- சிவம்- சுந்தரமாய்
சிவசக்தியாய் தெய்வீகக் காதல் நெறி

ஆழமாய் முத்தமிடு, வாய்வழி நம் ஆன்மாக்கள் இணைய
ஆடைகள் இலையுதிர்கால இலைகளாய் தாமாய் உதிர
ஆழமாய் முத்தமிட்டு என்னுள் வேர் விட்டு
ஆண்டாள் என்னை கண்ணனாய் ஆட்கொள்

பணம் படைத்த உலகில்-காதல் மனம் தேடும் பெண்மை
பொன்மானைத் தேடிய சீதையின் மென்மை
உன்னை நினைந்து உருகும் என் நினைவுகள் இரகசியமாய்

உன்னைக் காதலிக்க, நிராகரித்தல் இன்றி-இரவுகளில்
கனவுகளால் உன்னைத் தழுவி நெஞ்சம் மகிழ
உன் சொந்தம் நான்-என் சொந்தம் நீ





உடல் தாண்டி-மனம் இணைய, தூரங்கள்
நம்மைப் பிரித்தாலும், இதயங்கள் இணைத்த உறவு-
காதலர் நாம் படைத்த எம் பிரபஞ்ச உலகு

இதழ்களால் ஈரமாக்கி-பூவை என்னை காயாமல்
காத்துக்கொள், ஈரமான ரோஜா எனைச் சூடி
வாடாமல் போர்த்திக்கொள்

அவன்


இதழ் கொண்டு இவளை அளக்க முயன்றேன்-முடிவில்
என்னை மறந்தே, இன்பக்கடலில் மூழ்கிப்போனேன்.
அம்மணமாய், காதல் சுரத்தில் வாடும் பெண்மைக்கு
சிவமே ஆடையானேன், என்னில் பாதியான உமையாள்
காதல் நர்த்தனம் ஆடும் சிவசக்தியாய் நாம்

<u>அவலம்</u>

அந்தியில் மலர்ந்து-அதிகாலையில்
உதிரும் அந்திமந்தாரை- காமனின்
அர்தஜாம பூஜையின் செந்தாமரை-காமனுக்கு
அர்ச்சனை மலரானபூவை ?

அவள் நிலை

முத்தமழை பொழிந்து காதல் சொல்லாமல், மோகனப் பொற்சிலையை
ஆரத் தழுவி சுருதி சேர்க்காமல், மன்மத ராகம் இசைக்காமல்
கயல்விழி பார்த்து-கவிதை சொல்லாமல், காமனை அழைக்க
காதல் வேள்வி செய்யாமல் தொடங்கிய அசுர யாகம்



உச்சம் காணாமல், ஒரு சிகரம் தொடாமல், கலிங்கம் உரித்து
காமம் விதைக்கும், காமக்காரனின் விதை நிலமாய்
நாளும் துச்சாதனர்க்கு-பொன்னுக்காய் துகிலுரியும்
திரௌபதியாய், மதுகாரிக்கு இதழ்விரித்த பூக்காரியோ பாவம்


இதழமுதம் பருகி, இவளமுதம் எனச் சொல்ல-நெஞ்சில்
காதல் இல்லை, காதலாகி மெய் கொண்டு-மெய் கடைந்து
பேரின்பம் காண காமத்துக்கு வரமில்லை-

அன்பினால் ஆரத் தழுவி, ஆடையாய் மூடிக்கொள்ள
காமுகனுக்கோ காதல் கரங்களில்லை, அணைக்க அணைக்க
வளரும்-காதல் தீ, அணைக்க அணைக்க அணையும்-காமத் தீ
ஊமை நெஞ்சில் அணையாத சோகத்தீ

பூவாய் நான் மலர-என்னில் வேரூண்டு, கனியாய் என்னை உண்டு
காதல் பசியாறு, ஈர மண் என்னில் காதல் விதை தூவு
காதலாகி பூக்கின்றேன்-காதலனாய் இதயத்தில் சூடிக்கொள்

காமத்தீ மிதிக்கும் பக்தனாய் நீ மாறு, பூ மிதிப்பிற்காய்
இதழ்விரிக்கும் பூவையாய் நான் மாறி, ஆடை களைந்து
கொக்கி கழற்றி, அம்மணமாய்-அழகாய்-அம்மனாய்
தரிசனம் தருகின்றேன் தேவி தரிசனம் எனக் கூறு

அவலம்



உழுது களைத்த உடல் ஒதுங்க, உருவில்லாத் துயர் மலையாய்
மனதை நொருக்க-அழகால் செதுக்கி அழுகையால் முகம் துடைக்க
விதி செய்தான் -விலை மாதாய் சதி செய்தான் பிரம்மன்

கவிதையல்ல வாழ்வு, களிப்பும், கண்ணீரும், சிலுவையும்
கலந்த கலப்படம், நிஜங்களைவிட நிழல்களும்
மலர்களை விட முட்களும் மலிந்த உலகில்
நீரில் மூழ்காத தாமரை நித்தம் கண்களில் மாறாத நீர்த்திரை

நிந்தனை வந்தனை தாண்டி-நித்தம் நிர்மலமாய் பூத்து
கண்ணில் நீர் வடிய கன்னி உதிர்வாள்
இறைதாள் உள்ளத்தில் பதிய
இன்னோர் மரிய மதலேனாய் பெண்ணாள்

கண்ணீர் பூச்சரம் கால்களை கழுவிட
கவிதைப் பூச்சரம் இறைவனை தொழுதிட
விலைமாதாய் இவள் வாழ்வு
சம்போகத்தில் நாளும் இவள் சாவு



கொழுகொம்பில்லா பூங்கொடி, சூறாவளியில் ஆடும் காற்றாடி
சத்தியம்-சிவம்- சுந்தரம் மனம் உருகி பாட- சிவனுக்காய்
தவமிருக்கும் தேவி- சிறையிருப்பதோ அசோகவனம்-
காதலில்லா வாழ்வோ வரண்ட பாலைவனம்

மெய் கொண்டு மெய் தின்று, பெண்ணின்பம் தேடும் உலகில்
பெண்களே விபச்சாரி என்பது வேடிக்கை-நாளும்
கற்பழிப்பும், வல்லாங்கும் ஆண்களின் கேலிக்கையாக
பெண்பாவம் தீராத பாவமாக-காமுகனே
உன் தாயும் பெண் என்பது நீ அறியாத சாபம்.

நீ வந்த யோனி நொந்து பெற்றது உன்னை
காமுகனாய் நீ உழுத யோனி-நொந்தே
பாவி எனச் சாபமிட்டதும் உன்னை

அன்பெனும் அரியத்தினூடு அம்பு தைத்த விலைமகள்
இதயத்தைச் செலுத்திட ஏழு வண்ணங்கள் தாண்டிய
அரிதான வண்ணங்களாய் அவள் துயரங்கள்
ஏழு ஸ்வரங்களை கடந்த கண்ணீரக் கவிதைகளாய்
அபூர்வ ராகங்களாய் அவள் அழுகைகள்




கஜீராகு சிற்பத்திலும் அழகாய், அம்மணத்திலும்
ஆடையிலும் அவள் காதற் கோலங்கள்
வன்புணர்வு வேண்டாம்-மெய் காதலே நல் உறவு

பள்ளியறைக் கோலங்களை-புள்ளி மயில்-ஏழ்மையால்
பாதையில் போட்டாள், இரசிக்க யாருமின்றி-
பெண் நிலவோ, கட்டில் காட்டில் காய்ந்தே தேய்ந்தாள்

காமத்திற்கு சூத்திரம் வகுத்து, கலையாய் இரசித்துப்
போற்றிய உலகில், காதல் உயர்ந்த கலை
கற்றவர் இரசித்தார்-மற்றவரோ காமுகராய்
விலங்குகளாய் அலைந்தார்

யோனிக் கடலில் விந்து கலந்திடத் தோன்றும் ஜந்து
யோனி வழிப்பிறந்து, யோனியில் ஆடிக் களித்து
மூச்சடங்கிட சுடுகாட்டில் சாம்பலாகி-கங்கையில்
கரைந்து மறையும் காமச் சிந்து



ஒவ்வாரு முறையும் உழுது விதைக்கும்போது
கசியும் கண்ணீரில் அவள் ஆன்மா உருகிக் கரையும்-
பெண்மையைப் போற்றினால்-தாய்மையே தெய்வம்
தாயின் காலடியில் சொர்க்கம்

கண்ணகி இருந்தும் மாதவியைத் தேடும் ஆணினம்
காமுகனுக்கு கன்னியர் மடியிலே சுவனம்?
கற்பும், மானமும் கடைச்சரக்கான அவலம்-பாஞ்சாலி
சீதை, மாதவி, அகலிகை, கண்ணீர்க் காவியம்

நெய் வளர்த்த தீயில் நீராடி வந்தாள் சீதை
கற்பைச் சொல்ல, ஆண்டுக்கொருமுறை -தீயில் நீராடி
அண்ணன், தம்பிகளைச் சேர்ந்தாள்-பாஞ்சாலி
வாழ்வில் பலமுறை, பெண் வாழ்வோ சோதனை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-08-10-2023

பாமினி-பொன்மானைத் தேடி



பொன்மானைத் தேடி பாலை வனம் போன ஸ்ரீராமன்
பெண் மானைக் கவர்ந்த இராவணனோ பேரழகன்
மணவாழ்வில் இன்புற்ற மைதிலி-மூன்று
பிள்ளைகளக்குத் தாயான பாமினி

தேனான மணவாழ்வும் மாயாவிக்கு வேம்பாய்க் கசந்திட
மலர் விட்டு மலர் தாவும் வண்டு-தாயோடு
சேய்களைத் தவிக்க விட்டு விட்டு-மங்கையர்
சுகம் காண கண் மறைந்த யயாதியாய்ச் சம்போகி

மலரான வாழ்வும் முள்ளாக, மாங்கல்யமும்
கழுத்தை நெரிக்கும் சுருக்குக் கயிறாக, மையெழுதிய
கண்களில் நீர் ஏந்தி, பூ மனதில் காங்கையை ஏந்தி
கலங்கிடும் அன்னையின் சோகம் ஏழ் கடலிலும் ஆழம்.

ஆண்டுகள் பல கடந்திட, அன்னையின் வாழ்வில்
புது வசந்தம், குழந்தைகள் வளர்ந்திட
கூடி வந்த ஞானம், இளமைக் காதல்
கானல் நீர் என்ற பாவம்

கூட்டை விட்டுக் குஞ்சுகள் பறந்திட
தாய்ப் பறவையோ தனி மரம்-குஞ்சுகள்
நலம் வாழ-கூவிக்களிக்கும் வாழ்விலும்
மாறாத தாய்மையின் குதூகலம்

அன்னையைப்போல் ஒரு தெய்வமில்லை
என்றும் மாறாத சத்தியம்-அறியாப் பருவத்தில்
காதலில் விழுந்த சீதை-நாளும் புரிந்திட
வாழ்வே மாயம் என்னும் கோதை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra- 28-09-2023

என்னை மறந்ததேன்

ஒரு வார்த்தை சொல்லாமல் கண் மறைந்தாய்
ஒரு மடலும் எழுதாமல உன்னை மறைத்தாய்-உன்
தொலைபேசி மணியொலிக்காய் என் தவங்கள்-உன்
ஈ மெயிலின் வரவிற்காய் என் செபங்கள்



நாட்கள் கழிந்தன பருவங்கள் வந்து போயின
வாட்டும் நினைவிலும், வருத்தும் கனவிலும்
நெஞ்சை எரிக்கும் உன் காதல் தீ

அலைமோதும் கடல்போல் உள்ளம் அல்லாட
நூலறுந்த காற்றாடியாய் மனம் தள்ளாட
காற்றினில் வந்த சேதியில் கடல் கடந்த நாட்டில்
கல்யாணப் பெண்ணாய் நீ


வாழ்த்துவதா வருந்துவதா? வாழ்கை இவ்வளவுதானா?
காதல் இதுதானா? அழ மறுத்த விழிகள்
அந்தி வானை வெறித்திட சோடியாய் வீடு திரும்பும் பறவைகள்
சோகத்தை கூட்டிட மெல்லச் சிரிக்கின்றேன்

எங்கிருந்தாலும் வாழ்க என இதயம் வாழ்த்திட-என்னிலும்
நல்லவனை இறைவன் தந்தான் உனக்கு என்றே
இறைவனை போற்றி, எல்லாம் அவன் செயல் என்றே
என் பயணத்தை தொடர்கின்றேன்

உறவுகள் சிறுகதைதான்- பலவேளைகளில்
குறுங்கவிதைதான்-இருவரிக் குறள்தான்
ஒரு வரி தொலைந்தால் உண்மைக் காதலில்
ஒலிப்பது இதயத்தின் அழுகுரல்தான்

எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
Pax Ravichandra-28-09-2023

இலையும், இறகும்






உதிர்ந்த இலையும், கழித்த இறகும்-ஒன்றாய்
சுற்றிச் சுற்றி காற்றில் ஆடிய சுருளி நடனம்
வாழ்வு வட்டமான சுருளி வடிவம்
மண்ணில் கிடந்தபோது புரிந்த தத்துவம்

வானில் வட்டமிடும் பருந்து
வானைத் தொட்டிட கைவிரிக்கும் விருட்சம்
பார்த்த விழிகளில் ஆனந்தப் பரவசம்
உலகில் எல்லாம் மாறும் நிதரிசனம்

முதுமையிலும் இளமை குன்றாத இறகு
பசுமை இழந்து சருகான இலையும் அழகு
உயரப் பறந்த ஆனந்தம் இறகில்
உழைத்துக் களித்த பேரின்பம் இலையில்

சருகான இலை மீண்டும் மலராது
உதிர்ந்த இறகும் வானில் பறக்காது
எல்லாம் மாறும் உலகில்-
எதுவும் நிலைக்காது



வெள்ளித் திரையில் மாறும் காட்சிகளாய் வாழ்க்கை
நேற்று, நாளை என்று காலத்தில் இல்லை-இருப்பது
இக்கணமே-அறிந்தால் வாழ்வோ இனிக்கும் உண்மை
ஆத்ம சன்னிதானம் இதுவே, இது காலம் எழுதும் கவிதை

நடிப்போ எனக் கழியும் வாழ்வில் நாளும் பல பாத்திரம்,
என்றுமுள்ள தர்மமே மாறாத சூத்திரம்
மூச்சுப்போனபின் உடைந்த மண் பாத்திரம்
பாடை கட்டி காடு போக, உலகோ ஓர் சத்திரம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-29-09-2023

என்னவளே அடி என்னவளே





கண்டு மயங்கிய அழகை-குறிஞ்சிமலர்த் தேனாய்
உண்டு களித்த விழிகளில் தேனீயின் ரீங்காரம்
உண்டு சுவை, இதழ் சுவை தேன் என- கயல்விழி
செப்பிடும் மொழியோ காதல் பாசுரம்

வேலோ விழிகள், வில்லோ புருவம்-செவி
மயங்கிட மொழியோ மலைத்தேன்
இதயம் துடித்திட, அழகைக் கண்டு மலைத்தேன்
காதலில் விழுந்தே என்னை மறந்தேன்

வண்டுபடு கூந்தலில் மல்லிகை வாசம்
பொன்மேனியிலோ சந்தனத்தின் சுவாசம்
காளையர் கண்பட்டு வருந்திட-செம்பங்கய
முகக் கன்னியோ காதல் தேசம்

பூவையை கண்ட மனம் தன்னை இழக்க
காதலின் ஈர்ப்புவிசை என்னை மயக்க
நாணமோ பேரழகு, காமன் கணைபட்டு,
கணை பட்ட மானாய் கலங்கும் என் உலகு



கண்டு மயங்கிய அழகில் இதயம் தவிக்க
காதல் புலத்தில் தன்னை இழந்து மனம் துடிக்க
இமைக்க மறந்த விழிகள்-இவளின்றி
வாழ்வில்லை என்ற காதல் நிலைகள்

கண் பார்த்து காதலை நெஞ்செழுத-நாணத்தால்
மண் பார்த்து அன்ன நடைபோடும் பெண்ணோ தோகையழகு
கண்பட்டு, காதலால் புண்பட்டு, நெஞ்சம் வாட
காளையர் மனங்கொத்தும் வேல்விழியாளோ பூஞ்சிட்டு

குவளை விழிகள் பூத்தாட குறுநகையில் முத்துச்சரம்
சுவாசம் மயங்க கார்குழலில் மணக்கும் மல்லிகைச்சரம்
பார்த்த மனதில் காதலின் பூமணம்.
கன்னியோ வாசமலர்களின் நந்தவனம்

கண்டு நெஞ்சங்கள் காதலில் விழ-இரு
மனங்கள் கலந்து இன்பம் பொங்க-இன்றுமுதல்
எமக்கோ நாளும் காதலர் தினம்
பூ வனத்திலோ காதல் குயில்களின் ஓயாத கானம்





பங்கய பூமுகத்தில் குவளை விழிகள்
அங்கனை குமுதவாயில் குறிஞ்சித்தேன் சுனைகள்
கார்குழலில் முல்லைப் பந்தல்-நாணிடும் அழகில்
நானிலப் பூக்கள் பூத்தாடும் அழகின் பேரவை

செம்மொழியோ திருவாசகம்-அன்ன நடையில்
மெட்டி ஒலியோ பெரியாழ்வார் பாசுரம்
கன்னியோ காதலின் நாதஸ்வரம்-கண்பட்டு
காளையர் வருந்த கன்னியோ காதல் சுரம்

கயல் விழியாள் காதல் நோய்தந்து
கனிமொழியாள் மருந்தும் ஈந்து
புன்னகையால் எனை ஆட்கொண்ட
பெருந்தேவி இவள் தானோ?

பார்த்த விழிகள் நெஞ்சில் பரவசம் ஊட்ட, பூத்த முத்துப்
புன்னகை மணமாலை சூட, வளையலும், கொலுசும்
கெட்டி மேளம் கொட்ட, மணநாளாய் மாறிடும் பொழுது.
காதல் வானில் உலாவும், காதலர்க்கு இன்று தேன் நிலவு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra -29-09-.2023

இரு மனிதர்கள்





ஒளியில் விழித்து, இருளில் உறங்கி, ஒளியும், இருளும்
மாறி, மாறி வர ஓயாது ஒளிர்ந்திடும் சூரியனை-நீள்
வட்டப்பாதையில் சுற்றி நடனமாடும் பூமி
வாழ்வு வட்டம் எனச் சொல்லும் சாமி

வந்து, போகும் வசந்தமும், கோடையும், எதுவும்
நிரந்தரமல்ல, வாழும் பூமி சத்திரம் எனக் கூறிட
சித்தார்தனக்கு-வீடு தேடும் வாழ்வு
ஒரு தீர்த்த யாத்திரையானது

அழுக்கேறிய ஆடை-வெற்றிலைக் காவியால்
பளுப்பேறிய பற்கள், துயர் துடைக்க வழியின்றி-
பெற்ற மகவோடு, இரந்து பிழைத்திட தெருவுக்கு வந்த
துஷ்யந்தன் மறந்த புதிய சகுந்தலை

துயர் மறக்கப் போதைக்கு அடிமையான பேதை
ஆலயத்தில் போதையோடும் குழந்தையோடும் இரந்து நிற்க
காவலரிடம் சிறைப்பட்ட கோதை
அரசுடமையான குழந்தை, அநாதையான அம்மை



வாட்டும் வறுமைக் குளிர் போக்க வள்ளலாய் போர்வை
தரும் பேகன்களுக்கு, காமக் குளிர் தீர்கப் போர்வையாகும்
பூவை, பூத்து மகிழுமுன் வறுமைத் துயர் வாட்ட
சோகவனத்தில் சிறையிருக்கும் அபலை

காம இன்பம் சுவைக்க -பேதையும்
பழம் மதுவான போதை-போராட்டமான வாழ்வில்
மனச்சாட்சியை உறங்க வைக்க
மதுபோதையில் உலாவரும் மனமதன் கீதை

வயிற்றுப் பசி தீர்க்க காமப் பசி போக்கும்
காமத்தின் அட்சய பாத்திரம்-பஸ்
நிலையத்தில் கூடு கட்டிய காமசூத்திரம்.

காமவேதம், நான்கு வேதங்களிற்கு முந்திய
ஆதிவேதம், மனித சந்ததி உலகில் பல்கிப் பெருகிட
ஆதாம் ஏவாளிற்கு இறைவன் வழங்கிய காதல் வேதம்

காமத் தீயில் மெய் ஆகுதியாக -இருபால்
ஒத்து யாக்கும் இன்ப வேள்வி காமவேள்வி

அந்தியில் குழந்தைகளோடுஉலாவரும்
தம்பதியரை பார்த்து-நந்தவனத்தில் குந்தியிருந்து
நெஞ்சில் பெருமூச்சு விடும் மங்கை-துயரத்தில்
கர்ணனை கங்கையில் விட்ட குந்திக்குத் தங்கை



கண்டு கண்கள் கலங்கிட, நெஞ்சம் இறைவனை
கூவிக் கரைந்திட, காந்தி சிலையருகே -யாரும்
கண்ணெடுக்காத காட்சிப் பொருள்-விரக்தியின்,
துயரத்தின், வறுமையின் தடயப்பொருள்

இவள் நெஞ்சிலும், நினைவிலும் காமம் இல்லை
வறுமைக்கு அஞ்சிய ஏழை-வாழ்வாதாரத்திற்காய்
முந்தானை விரிக்கும் பழமுதிர்ச்சோலை
காமவேதம் ஓதும் இந்திரருக்கு-புதிய அகலிகை

இதயம் பாடும் முகாரியைக் கேட்க யாருமில்லாத அநாதை
துச்சாதனனிற்கும் ஆடை கலையும் பாஞ்சாலியோ ஏழை
கண்ணனன் மனமிரங்க அரசிளங்குமாரியல்ல-பேகன்
போர்வை கொடுக்க இவளும் கலாபமயிலாய் இல்லை

காமவைரஸ் தீண்டியும்-நிர்ப்பீடணமான கோதை
கொரோனா உலகில்-நாளும் தப்பிப் பிழைக்கும் ஏழை
வறுமை, தனிமை, போதை புயலாய் வாட்டிட
மனம் கல்லான அகலிகை

ஆடிப் பிழைக்க இவள் காவிரி மாதவியல்ல, அழகில் மயங்கி
அள்ளிக் கொடுக்க கோவலனாய் யாருமில்லை-கடத்திச் செல்ல
அழகில் இவள் சீதையுமில்லை-மானிடரே
காமம் பாவமல்ல கடந்தால் கடவுளாவது பொய்யல்ல



இரத்தலும், பாலியலும் வாழ்வாக, விறைத்த மனம் கல்லாக
உழுது விதைக்கும் காம உழவருக்கு இளமை இருக்கும் வரை
காமபோக விளைநிலம், கொறித்துப் பசியாற
காமக் கால்நடைக்கும் வேலியில்லாத மேய்சல் நிலம்

விந்து நதிகள் பாய்ந்தும் நிரம்பாத யோனிக்கடல்
விலைவாசிகள் வானைத் தொட சில்லறைகளால் தீராத
வறுமையால்-நாளும் விலைமகளாய் மாறும் சோகக்கடல்

விந்து நதி கலக்கும் கூடலாய் யோனி
காமக் கடல் கடக்க வேதியருக்கும் இவள் தோணி
வானைத் தொடும் விலை வாசி-மலிவாய் காமம்
சுவைக்கும் காமுகரோ உல்லாசி

கண்ட மங்கையின் துயர் நெஞ்சில் கனக்க,கனத்த இதயம்
இறைவனை கெஞ்சி அழைக்க,உலாவந்த பாதையோரம்
மிட்டாய், கடலை பொதிகள் தொங்கிட-இருளில்
ஒதுங்கி நின்ற நான்கு சக்கரவண்டி



ஐயா வண்டியை ஓரமாய் நிறுத்துங்கள்-விளக்கு இல்லை
வேகமாய் வரும் வாகனம் மோதிவிடும் உரைத்து நோக்கினேன்
பழுத்த முதுமை களைப்பால் உறங்கிட, உழைத்து உண்ணும்
மேன்மை உவப்பை அளித்திட, வியந்து மெல்ல நடக்கின்றேன்

இமயமாய் இதயம் கனத்திட ஈர விழிகள்
வானை நோக்கிட வாழ்க்கை போராட்டந்தானா?
மெல்லிய தூறல் என்னை நனைத்திட
யாருக்காக அழுகின்றது வானம்?

மங்கையும், முதியவரும் துன்புறும் இயேசுவாய் காட்சியளிக்க
என் தேவனே, என் தேவனே ஏன் என்னை கை நெகிழ்ந்தீர்?
குருவாய், லேவியனாய், கடந்த போகும் உலகில்
நல்ல சமாரியனாய் நானில்லை-நெஞ்சு நொந்தது



கல்லில் வடித்த சிலைகள் கடவுளாக-நாளும் அர்ச்சனை
வறுமைக் கறையானகள் அரிக்க-நடைப்பிணங்களான
ஏழைகள் வாழ்வோ எந்நாளும் எரிநரகான நிலை

ஐம்புலன்களையும் ஆறாம் அறிவையும் வருத்தும் காமவேதம்
வியாசர் தொகுக்காத ஞான கீதம்-இன மத மொழி கடந்து
மானிடர் எல்லோரும் ஓதும் மன்மதவேதம்
ஞானியரையும் வீழ்த்திய காம பாணம்-
பல்கிப் பெருகி பூமியை நிரப்பிட
ஆதாம் ஏவாளுக்கு இறைவன் ஓதிய ஆதி வேதம்
ஓம்



ஈகை நிறைந்த உள்ளம்-இழந்த காலோடு உழைத்து
இருப்பதை இல்லாதோரோடு பகிரும் வண்மை
சிரசிலே முடி, கரத்திலே கோல்
கருணை வடிவான பெண்மை-தெய்வமான மேன்மை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-29-09-2023

இருவர் உள்ளம்

நீலவிழிகள் நெஞ்சில் எழுதிய சித்தன்ன ஓவியம்
கோலமயிலாய் என்னுள் ஆடிய சௌந்தர்ய நாட்டியம்
கானகுயில்களாய் பாடிய அமுத கானம்
இதயத்தை நொருக்கிட இன்றோ ஈரவிழிக்காவியம்
இன்னோர் தேவதாஸாய் என்தன் சீவியம்



ஜோடிக்கிளிகளாய் பேசிய காதல் மொழிகளும்
வானம்பாடிகளாய் பாடிப்பறந்த காலமும்
பொய்யாய், கனவாய், பழங்கதையாய் மாறிட
பிரிவைச் சொல்லி பறந்த என்தன் ஜோடிக்கிளி
நெஞ்சில் சோகத்தை அள்ளித் தந்த
என்தன் பஞ்சவர்ணக்கிளி



ஆற்றோரம் உலாவி ஆயிரம் கதை பேசிய பொழுதும்
அழகு மயில்களாய் ஒன்றாய் ஆடிக்களித்த நிகழ்வும்
நிலவு பூத்த இரவில் யாத்த காதல் தவமும்
நீரில் எழுதிய எழுத்தோ?-தூண்டில் புழுவாய் துடித்து,
கூண்டுக்கிளியாய் தவித்து
ஒற்றைக்குயிலாய் கரையும் என்தன் காதல் மனசு

காதல் வெறும் கனவோ-கன்னியும் மாரி மழையில்
தோன்றி மறையும் வானவில்லோ?
சொல்லிய மொழியும் நீரில் எழுதிய எழுத்தோ?
என் காதலும் காற்றில் கட்டிய காதல்மஹாலோ?

ஒற்றைக்குயிலாய் கரைகின்றேன்
என் ஜோடிக் குயிலே உன்னிடம் பதில் இல்லை-
காதல் தீயில் வேகுகின்றேன்
பொற்றாமரைக் குளமாய் நீயில்லை

வார்த்தைகள் உறவாடலின் பாலமா?
உறவுகளை பிரிக்கும் தடுப்புச்சுவரா? புரியவில்லை
நிரபராதியை தண்டித்த உன் நீதி
நெஞ்சில் பாய்ந்த நெருப்பு கணையானதடி

பூ நெஞ்சம் வலிக்குதடி, தண்டிக்கப்பட்ட கைதி நான்
பிரிந்து போகுமுன், அறிந்திட துடிக்கின்றேன்
ஏன் என்னை மறந்தாய்? எதுவும் சொல்ல மறுத்தாய்?
சொல்ல நினைத்ததும் இதுதானா?



புண்பட்ட நெஞ்சோடும்-கண்பட்டதோ நம்
காதல் என்ற சொல்லொன்னாத் துயரோடும்
உண்மையை அறியத் துடிக்கின்றேன்

சுவைத்த என் அன்பை நினைத்துப் பார் -உன்
இதயத்துடிப்பை உற்றுக் கேள், உன்னுள் துடிப்பது
என் இதயமடி, என்னுள் தவிப்பது உன் இதயமடி
நான்கு வேதம் கடந்த ஆதி வேதமடி காதல்

உணர்வுகளுக்கு உருக்கொடுக்க வார்த்தைகளுக்கு
ஆண்மையில்லை சொல்லிப் புரியவைக்க காதல் பாடமல்ல
இதயங்களின் பரிபாஷை காதலடி

வார்தைச் சிறையில் என்னை அடைக்காதே
வாடிய பயிராய் துடிக்கின்றேன்
காதல் மழையே என்னை மறவாதே

நீயில்லாமல் தவிக்கும் என் மனசு
நிலவிழந்த வானாய் துடிக்குதடி
ஒற்றைக்குயிலாய் கரையும் என் உள்ளம்
உன் கானம் கேட்கத் தவிக்குதடி

என் மனமோ தீக்குளிக்க, மௌனராகமோ
மனதை நோகடிக்க காதலால் என்னைக் கவிஞனாக்கிய
அமராவதி, காதலே எனக்கு காலனாகிட
காதலால் என்னை தேவதாஸாக்கிய பார்வதி

காதல் மழைமேகம் கடல் கடக்க
கண்ணீர் மழைமேகம் எனனை நிறைக்க
அசோகவனச் சீதையாய் என்னவள் அங்கே
சோகவெள்ளத்தில் மூழ்கிய ஸ்ரீராமனோ இங்கே

விதி எழுதிடும் கதையில், பொன்மானைத் தேடிய சீதை
ஸ்ரீராமனை இழந்த கோதை, காதலும் முடிவில் சிலுவைப்பாதை
பிரியேன். மறவேன் என-காதலை கற்றுத்தந்த பாவை
என்னை மறந்தாள் பெற்றவரோடு கடல் கடந்தாள்

இறுதிச் சந்திப்போ இருவருக்கும் துயர நினைவாக
கண்ணீர்ப்பூக்களே பரிசாக, நாளும் சந்தித்து
காதலை வளர்த்த “***காபி ஷொப்போ***”
எம் தாஜ்மஹலானது

கண்மறைந்த காதலை நெஞ்சம் வாஞ்சிக்க
நெஞ்சில் ஓர் ஆலயமாய் கன்னியைப் பூஜிக்க
வனாந்தர உலகில்-இயந்திர மனிதனாய்
கழிந்து போன நாற்பது வருட என் வாழ்வு

காலவெள்ளத்தில் முடி நரைத்து நடை தளர்ந்து
கண் மங்கி-பணியாற்றி ஓய்வு பெற்று
அந்தியில் நாளும் வரும் காபி ஷொப்பில்
அதிசயமாய் கண்ட மங்கை

மூப்பின் கோலம் அழகைக் கூட்ட, காப்பிய அழகினை
கருவிழிகள் காட்ட, கோப்பையைப் பற்றிய கரங்கள
என் மனக்கோப்பினைத் தூண்ட வியந்தவன்-முன்னே
அமர விழிகளை உயர்த்தி புன்னகைத்தவள்
என்னை அந்நிய பாவத்தோடு பார்த்தாள்



மலரும் நினைவுகள் மனதில் பூக்க, மங்கையின்
நினைவுகளில் மனம் சிறகு விரிக்க, கரண்டியை
கோப்பையில் தட்டிட எழுந்ததோ என் இதயரராகத்தின்
எதிரொலி எம் முதல் சந்திப்பின் இசையொலி

வியந்த விழிகள் என்னை மொய்க்க-அன்று
மயங்கிய வாழ்வில் வசந்தத்தை-இன்று
இசை அடையாளம் காட்ட
இதயம் பூரிக்க எம் சம்பாஷனை

மணமுடித்தேன்- மகவு இரண்டு பெற்றேன், காலவெள்ளத்தில்
கணவன் இறக்க, பிள்ளைகள் மணமுடித்துப் பறந்திட
மறவாத பிறந்த மண் வா என்றழைக்க
சகோதரியுடன் வாழத் தாயகம் வந்தேன
.

இரவு இரயிலில் என் பயணம், எழுத்தை தொடர-ஆசிரியாக
பள்ளியில் பணிபுரிய என் புது வாழ்க்கை
பழையதை ஒரு முறை நினைத்திட-போகுமுன்
பழகிய இடத்தை பார்க்க வந்தேன்

விழிகளில் பரவசம் பொங்க, மொழிகளில் அதிசயம் தொங்க
விளம்பிய மங்கை-இறந்த காலத்தின், இறுதிப்பக்கமான
காதல் கங்கை., இன்றோ நிகழ்காலத்தின்
புதிய அத்தியாயமான பருவநங்கை

நீங்கள் மணமுடிக்கவில்லையா?
மணமிருக்கும் வரை பூக்கடை
மணமிழந்தால் பூக்களுக்கும் குப்பைக்கூடை
என் வாழ்வோ ஒரு யாத்திரை

இனியும் உன்னைப் பிரியேன், இங்கே பணி புரியப்
பாடசாலையுண்டு, உன் எழுத்தை தொடர என் துணையுண்டு
ஒரு முறை உன்னை இழந்தேன் இனியொருமுறை
இழக்க மாட்டேன், அன்போடு அவள் கரம் பற்றினேன்



இளமைக் கோலமல்ல காதல்-கனிந்த
இரு மனங்களில் சங்கமம் காதல்
காதல் என்றும் அன்பின் புதிய வேதம்

பூ மனங்களை இணைக்கும் பொன்னிழை காதல்
தேவராகத்தின் இன்னிசை காதல், காலம் தாண்டிய
உன்னத உறவும் காதலே, காதல் வரக் காலமில்லை-
காதலுக்கும் வயது எல்லையில்லை

நாளும் விடியும் பொழுதும்
நேற்றைய பொழுதல்ல-தொடரும் வாழ்வில்
அன்பின் அதிசயங்களுக்கோ குறைவில்லை
காதலே வாழ்வு-காதலின்றேல் சாவு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-29-09-2023

இதயம் கலந்த இன்ப உறவு





கண்டு விழிகளும் காதலாகிச் சங்கமிக்க
செங்கமல விழிகளும் பூத்துச் சம்மதிக்க
பொன்மேனி தழுவி பூந்தென்றலும் மணக்க
என் சுவாசத்திலோ காதலின் சுகந்தம்

இரு மனங்களின் காதல் சங்கமத்தில்
வண்ணப்பூவாய் மலர்ந்த பெண்மை
கைத்தலம் பற்றி என் வாழ்வில்
துணையாய் வந்த அம்மை

விண்ணாகி, மண்ணாகி, விழி காணாப்
பரவெளியாகி, நீராகி, நிலமாகி, காற்றாகி
என் உயிரில் கலந்த உறவாகி
என்னில் பாதியான உமையாள்

நீர்க்குடம் சுமந்த இடையழகில்-என் மனம் காதலாகிச்
சொக்க- குடம் தளும்பும் நீர்போல் அழகைக் கண்டே
மனமும் காதலாகித் ததும்ப, கடை விழியாள் என் நெஞ்சை
கொத்தி காதல் சொன்ன மனங்கொத்திப் பாவை

அன்ன நடையோடு ஆடிடும் பூஞ்சடையில் என்னைச் சூடி
கொடியிடை அசைய, மேகலை சிணுங்க, என் மனம்
கிறங்க என்னை ஆட்டுவித்த பெண்மை, அழகிற்கே பெருமை

கோலமயிலாய் ஆடிக்களித்து, கானக்குயிலாய் பாடித் திரிந்து
குலமகளாய் என்னை ஆட்கொண்ட பூவை-சூடிக்கொடுத்த
ஆண்டாளாய் என்னைச் சூடிய மகிழ்ந்த பெண்மை

கண் பார்த்து நெஞ்செழுதிய காவியக் கன்னி
காளிதாஸன் சகுந்தலையோ? நான் சூட
தனையீந்த வண்ணப் பாவை ஜனகன் மகளோ?
நள தமயந்திக்கு மகளோ? நளாயினி

பண்ணோடு கலந்த இசையாய் என்னோடு கலந்தவள்
மண்ணோடு கலந்த நீராகி மனதை நிறைத்தவள்
மலரோடு கலந்த மணமாகி சுவாசத்தில் மணந்தவள்
மணநாள் முதல் என் உயிர்த்துடிப்பில் ஒன்றாகி
உமையொரு பாகனாய் என்னை மாற்றிய உமையாள்



நிலவாய் அவள் சிரிக்க-நித்திலமாய் பற்கள் ஒளி சிந்த
கயல் விழிகள் காதல் மொழிய, கனிரசம் பருகிட
அழைக்கும் செவ்விதழ், காஞ்சி இருக்க , கலிங்கம்
குலைத்து காதல் செய் என்னும் புன்னகையோ அழைப்பிதழ்

பிறை நுதலில் குங்குமம் சிரிக்க, கொலுசில் காதல் ராகம் ஒலிக்க
நூலிடையில் படந்த பூங்கொடியாய் மோகனம் இசைக்கும்
மணிமேகலை, காதல் வலையில் சிக்கிய கலைமானாய்
என் நிலை, காதலின் அட்சய பாத்திரமாய் அவள் நிலை

பொன்னில் வார்த்த தேவதை-காதலால்
என்னைத் தன் நெஞ்சில் வார்த்த பூவை
கவிதையால் நான் வடிக்கும் எம் கதை
காதலுக்கோ தேன் சுவை

காலையில் கோலமிடும் அழகை-
கண்களால் மாலையிடும் மணாளன்-அந்தியில்
மாலையிட்ட அழகை, மஞ்சத்தில்
முத்த கோலங்களால் அலங்கரிக்கும் குணாளன்


மைவிழி சிவந்து பொன்மேனி நாண
கைவளை ஒய்ந்து, கால் கொலுசு சினுங்க
நெஞ்சத்தில் எழுதிய கவிதையை-நேசத்தால்
மஞ்சத்தில் படிக்கும் காதல் கவிஞன்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-08-2023

உறவும் பிரிவும்

வாழ்வு முடிவற்றது-அன்பு அழிவற்றது
அன்பிற்கு பிரிவில்லை-மரணத்திற்கு
அன்பை பிரித்திடச் சக்தியில்லை
அன்பை அழிக்கவும் ஆற்றல் இல்லை

உடல்கள் மடிந்தாலும்-இதயத்தில் பூத்த
உணர்வுகள் மடிவதில்லை
உடன் பிறப்பைபோல் இனிய
உறவு ஏதுமில்லை



வறுமையோ வளமையோ, இளமையில்
ஒரு கூட்டுக் குஞ்சுகள்போல் வாழ்ந்த இன்பம்
மாளிகையிலும் இல்லை. ஆற்றுவதற்கு
வார்த்தைகள் இல்லை தேற்றுவதற்கு தாயும் இல்லை

உன்னைத் தேற்ற என்னிடம் ஏதுமில்லை
காலம் காயத்தை ஆற்றும்
கடவுளே நம் துணை
எல்லாம் அவன் செயல்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-08-2013

இன்ஷா அல்லா.

உறையூர் எலி



கட்டாந்தரையில் கற்பக தருவாய், இங்கொன்றும்,
அங்கொன்றுமாய், இயற்கை நட்டு வைத்த பனைகள்
வான் பார்த்த பூமியில் வளம்கொழிக்க நீரில்லை
உயிர் வாழ எலி வேட்டை தொழிலான கொடியநிலை

எலியே உணவானால் வாழ்வே, ஏழைகளுக்கு
சொர்க்கமாகும், ஏதும் கிடைக்காத நாட்களில்-
நாளும் நோன்பு-அடுப்பங்கரையில்
உறங்கும் பூனைகளாய் வாழ்வு

விண்ணும்தான் கருமை சூடி வனப்பிழக்க
மண்ணும்தான் இரவைத் தழுவி தன்னை மறைக்க
கொடிய வறுமைதான் வாழ்வின் அழகைப் பறிக்க
வறுமைச் சோகவனத்தில் வாழ்வு சிறையிருக்கும்

சுர்ர் என ஒலித்த-தீக்குச்சியின் உரசல், நிசப்தத்தை
ஒரு கணம் கலைத்திட, பூத்த தீயை பூவாய் சூடி
குமரிப்பெண்ணாய் நாணிச்சிரித்த குப்பி விளக்கு

மங்கிய ஒளியில், மௌனத்தில் லயித்திருந்த தாயோ
வண்ணமிழந்த வறுமைச் சித்திரம்-பசி
வாட்டும் சிறுவனோ கருகும் எரிநட்சத்திரம்.

தந்தை வந்தால் பசி தீரும், தாயின் மனத்துயர் நீங்கும்
தரையில் படுத்துக்கிடந்த சிறுவன் மனதில் பாற்சோறும்,
பழங்களுமாய் பல் சுவைக்கனவுகள் விரிய
அறுசுவை அறியாத நாவில் நீர் சுரக்கும்

கருகும் வயிற்றின் தீயை அணைக்க, கண்ணீர் உதிரும்,
கண்காணாத கடவுளை அழைத்து,
இன்றும் உண்ணா நோன்பு
உனக்கே என ஏழை மனம் கதறும்.

முடி வளர்ந்து சடையாக-முகம் மறைத்த தாடி மீசை
இடை மறைத்த அழுக்கு வேட்டி , பசியே தவமாக,
எலியே வரமாக தக்கன பிழைத்தல் வாழ-
வாழ்க்கைப் போராட்டம் தொடரும்



காலையில் எலி வேட்டைக்குப்போன புலி-அந்திக்
கருக்கலில் வளைக்குள் ஓசையின்றி ஒதுங்கிய எலி
தந்தையின் சோகமோ ஏழ்கடலிலும் ஆழம்-தாய் மனதில்
பசி வாட்டும் மகனின் முகமோ இமயத்திலும் பெரும் பாரம்.

தந்தையின் சிற்றூண்டித் தூக்கியை திறந்த சிறுவன்
வெற்றுக்கோப்பை கண்டு பசியால் அழுதான்
வாடிய மனம் தாயின் மடியில் தஞ்சம்
தாயின் நெஞ்சிலோ ஊமையின் சோகம்

வற்றிய முலையில் பசி தீர்க்கப் பாலில்லை
வாய்விட்டழ தந்தைக்கோ வார்த்தையில்லை
துணையின் பக்கத்தில் அமர்ந்தவன்-துயரோடு
மகனின் தலையை வருடிக்கொடுத்தான்

வருந்தும் மனது இயலாமையைச் சொல்லி அழுதிட
வருத்தும் பசிக்கொடுமையின் அகோரம்-தந்தையின்
கரங்களைத் தட்டி விட, தொடர்ந்த போட்டியில்
தோற்ற மகன் தந்தையை கட்டியணைத்துக் கதறினான்

அணைத்த மகனை ஆரத்தழுவி முத்தமிட்டு -ஈரவிழியோடு
மனைவியை பார்த்தவன், ஏனிந்தச் சோதனை
என மனைவி மடியில் தலைவைத்து அழுதான் தலைவன்

அழுத விழிகளை பிஞ்சுக் கரங்கள் துடைத்து
அன்னை, தந்தைக்கு-அன்னம் ஊட்டுவதுபோல் நடிக்க
போதும். போதுமென உண்டதுபோல் நடித்து -பெற்றோர்
ஏப்பம் விட்டுச் சிரிக்க வறுமையான உலகில் வற்றாத அன்பு

உணவும் கனவாய், உண்பதுவும் நாடகமான
அவல வாழ்வில்-போதுமடா என் மகனே என
மகனையும், கணவனையும் அணைத்து அழுத தலைவி

நோன்பான இரவுகள்-நொந்த சலித்து
புண்ணாகிப்போன மனதுகள்-நள்ளிரவில்
பசி மயக்கத்தில் உறங்கிய உறவுகள்

விடியலில் ஏழுந்து எலி வேட்டைக்கு விரைந்து,
கொடும் பசி தீர்க்க, புதர்களை களைத்து, எலி தேடி
அலைந்து- ஓர் புதரில் எலி வளையைப்
பொக்கிஷமாய் கண்டு மகிழ்ந்த ஏழை

பெருநிதி கண்ட பேரானந்தம் நெஞ்சில் மூள, தயாநிதி நீ
என நெஞ்சம் இறை துதிபாட, தீ மூட்டி புகையை ஊதி,
ஊதி வளைக்குள் புக விட்டு, எலி வரக்காத்திருந்த காளை

நிமிடங்கள் கழிய-மண்ணில் ஆங்காங்கே எழும் புகை
எலி வளைகளை காட்டிக் கொடுக்க, புகை வரும்
வளையெல்லாம் அடைத்து எலி வரக் காத்திருந்த தந்தை

மூச்சு முட்டிய எலியும் இறுதியில், மூடாத ஓர்
பொந்து வழியே ஓடிவர, மூச்சு முட்ட ஓடித்துரத்தி-
தடியால் அடித்துப் பிடித்து சாக்கில் முடிந்து
சக்கரவர்த்தியாய் வீடு நோக்கி நடந்த தலைவன்

வழியிலே கண்ட நண்பன்-பசியால் வழிப்பறிக்
கொள்ளைக்காரனாய் மாறிட போராடிக் களைத்தவர்-
சக்தியின்றி -மண்ணில் வேரறுந்த மரங்களாய் வீழ்ந்தார்



நட்பும் பகையாய் பசியால் நாறிட-நண்பா
என வாய்விட்டலறி அழுதவன்-கொடுத்துவிடு
என் எலியை கொடும்பசி, என் குடும்பத்தை
கொல்லுதடா எனச் சொல்லியழுதான்

அழுதவனைத் தூக்கி விட்ட நண்பன்-அன்போடு மடியில்
பொக்கிஷமாய் கட்டிவைத்த ஓடியலில் பாதியைப் பகிர்ந்திட,
உண்ட துண்டில் ஓர் பாதியை-மகனுக்காய் மடியில்
பத்திரமாய் முடித்து வைத்து நன்றி சொன்ன நண்பன்

உறையூர் எலி இறைச்சி உண்டு, பல நாள் நோன்பை
முடித்து விழா கொண்டாட, வீடு நோக்கி நடந்தான் ஒருவன்,
புதர் மண்டிய பூமியில் எலி தேடி அலைந்தான் இன்னொருவன்.-

புதர்கள் அசைய-வளை வழியே தலை நீட்டி
சூழலை ஆய்வு செய்யும் உறையூர் எலி
பலநாள் பட்டினியால் அதற்கும் தீராத பசி

தொப்பென வீழ்ந்த பனம்பழத்தை நாடி எலிகளும் ஓட
குடிசைவாசிகளும் ஓட, அலறிப் பறந்து அர்த்த ஜாமத்தின்
நிசப்தத்தை குலைத்த கோட்டான்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-08-2013

வாழ்வே மாயம்- கொரோனா

கொன்றழிக்கும் பேரழிவு ஆயுதங்களைக் கண்டு பிடித்த வல்லரசுகள்
கொன்றழிக்கும் கொரோனாவை கண்டஞ்சிட
உண்டு குடித்து உறவு கொண்டு கதைபேசிய சொந்தங்கள்
ஒரு கனவாய் கலைந்திட, நேற்றிருந்தார் இன்றில்லை

வாழ்வென்பது கனவன்றி வேறில்லை
நாளை என்று ஒன்றில்லை
வாழ்வு நீர்குமிழி என்பது நிஜத்தின் நிலை

முகக்கவசமும், கைகழுவுதலும் தனி மனித
இடைவெளியும், ஊர் முடங்கலும் காலத்தின்
கட்டாயமாக, தாழிட்ட ஆலயங்கள், விகாரைகள்
தொழுகை ஒலிக்காத பள்ளிகள்

கல்லூரிகளும், பள்ளிகளும், காலவரையரையின்றி மூடிட
ஊர் அடங்கு உத்தரவும், பொதுப் போக்குவரத்தும் மானுட
நடமாட்டத்தை நிறுத்திட, கண்காணாத எதிரியோடு-
இங்கொரு யுத்தம், குருதியிலோ அச்சத்தின் சத்தம்.

செய்திதாள்களும், வானொலி, தொலைக்காட்சிகளும்
வாழும் கலை சொல்ல, வாழ்வு முடங்கி,
பொருளாதாரம் நொருங்கி
வறுமை இருளுக்குள் வாழும் சொந்தம்

வீட்டிலிருந்து வேலை அரசுப்பணியாக, நாடுகள் முடங்கி
நம்பிக்கை நலிய உயிர்க்கொல்லி கொரோனா
உலகை அச்சுறுத்தும் காலம், மரண தேவன்
படையெடுக்க, உயிர்கள் கொள்ளை போகும் நேரம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-08-2013

வண்ணத் தமிழ் பெண் ஒருத்தி



கார் குழலும், பிறை நுதலும் மூங்கில் தோளும்,
முத்துப் பற்களும் ஜொலிக்க, ***திங்களில்*** முகம் எடுத்து,
செவ்வாயில் அமுதம் வைத்து- கண்படும் அழகை காக்க
நிறைகுடமாய் பொன் கலசங்களை மார்பில் வைத்த பிரம்மன்

குவளை விழிகளும், குனிந்த சிரசும் நாணம் சொல்ல
கனிந்த கன்னங்கள் கிண்ணம் பழுங்களாய் மின்ன
காதல் கிளி கொத்தாத புத்தம் புது செம்மாங்கனி
என்னைக் காதலில் வீழ்த்திய காமன் கன்னி

நூலிடையில் மேகலை, வெண்சங்குக் கழுத்திலோ
இரத்தின மாலை, நெற்றிச் சுட்டியும், வட்ட மூக்குத்தியும்
நெஞ்சை அள்ள, அழகில் குழைத்து, சந்தனத்தில் செதுக்கிய
மோகனம், என் இதயத்திலோ காதலின் ஆனந்தக் கீர்த்தனம்

இனிக்கும் இளம் பருவம், பார்த்தாலே போதை தரும்
காதல் மதுரசம், கற்பகத்தின் பூங்கொம்போ, கம்பனின்
மைதிலியோ, வள்ளுவனின் காமத்துப்பாலோ? வியந்தேன்
காமன் பூங்கணை நெஞ்சில் தைத்திட காதலில் விழுந்தேன்

நாணிய பூவிழிகளில் காதலின் ஜாடை
நறுமண மேனியிலோ மல்லிகையின் வாடை
சூட மலர்ந்த அழகுப் பூவை-ஆண்டாளாய்
தன்னைச் சூடிக் கொடுத்த பாவை

காதலான இதயம் கடலாய் நெஞ்சில் அலைமோத
ஏழ் ஸ்வரங்களில் ராகம் எடுத்து உள்ளம் இசைமாலை தொடுக்க
ஏழ் ஏழ் ஜென்மத்திலும் எனக்காய் இவள் என்றே வரங்கேட்டு
எந்நாளும் காதல் தவமிருக்கும் காதலன் நான்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-08-2013

வறுமை

வறுமைக் கோட்டின் அடியாழத்தில் வாழும் அம்மை
வராட்டி தட்டி எதிர் நீச்சல் போடும் பெண்மை
மண்ணில் ஒன்று, மடியில் ஒன்று என மழலைகள்
சாணத்தால் உயிர் வாழும் ஏழைகள்



உழைக்கும் கரங்களில் வளையலும் இல்லை-ஓயாது
நடந்து தேயும் கால்களில் செருப்பும் இல்லை
தப்பிய சாணம் சுவரில் பதிய, அப்பிய குங்குமம்
பிறை நுதலில் தெரிய உழைக்கத் தயங்காத பெண்மை
வறுமையிலும் கையேந்தாத மேன்மை

சித்தன்ன, சிகிரிய “ சுவர்” ஓவியங்களை உலகம் புகழ-
புகை படிந்து வண்ணமிழந்து வறுமைச் சித்திரம் வாழ
சாணத்தால் போடும் கோலம், வராட்டியாய் மாறி
கை கொடுத்த தெய்வமாகும் காலம்

களையான வறுமையும் கலையாக
கருப்பு வெள்ளைப் படமாக-உழைக்கும்
அன்னையின் வாழ்வோ உயர்ந்த காவியம்
அம்மா என்பதே தெய்வீகம்

கட்டழகுப் பருவத்தில் காதல் சுமந்த கன்னி, காதலினால்-
மழலை சுமந்த அன்னை, காலவெள்ளத்தில் சாணம் சுமந்த
பெண்மை, பிட்டுக்கு மண் சுமந்த பெருமானிலும்-தாய்மை
மேன்மை எனச் சொல்லாமல் சொல்லும் அம்மை

கவர்ச்சி காட்டும் மாதர் உலகில் கந்தை உடுத்தி,
கஞ்சோ கூழோ குடித்து- வாழ்க்கைப் போராட்டத்தில்
எதிர் நீச்சல் போடும் தாய்மை, பரத்தைச் சீமாட்டி மாதவி
வணிகப் பெருமட்டி, கண்ணகியிலும், மேன்மை

சாணத்தால் ஏழை படைக்கும் வராட்டியில்
சாதியமில்லை, ஏற்றத் தாழ்வுகளில்லை
மண்ணைப் பிசைந்து மனிதனைப் படைத்த
இறை படைப்பிலோ-எத்தனை ஏற்றத்தாழ்வுகள்

வறுமையை விரட்டிட, வராட்டி தட்டி விற்கும் சீமாட்டி
வறுமையின் உச்சத்திலும்- கையேந்தாத
உழைக்கும் வர்கத்தின் பெருமாட்டி

சாணம் தப்பிய சுவரோ கல்லு
வறுமை அப்பிய அம்மையோ
உழைக்கும் வர்கத்திற்கே உரைக்கல்லு

வறுமைத் தீயை அணைக்க-வராட்டி தட்டும் அன்னையின்
வாழ்வோ புனித வேள்வி, வண்ணம் குலைந்த
ஓவியத்திலும், மூளியான அம்மன் சிலைக் காவியத்திலும்
தாயன்பிற்கு நிகரேது என்ற கேள்வி

சுவரில் போட்ட சாணக்கோலமோ சில நாள் கழிய
காய்ந்திட உதிரும் , ஏழைகளின் வாழ்வில்
விதி போட்ட வறுமைக் கோலமோ-காயாது
ஆயுள் முழுதும் நரகாய் வருத்தும்

வறுமைக் கடலில் அல்லாடும் ஏழ்மை கரைசேர
எந்தப் படகுமில்லை, முதலாளித்துவ உலகில்-
சமதர்ம, பொதுவுடமைச் சமுதாயம்- கார்ல் மாக்ஸின்
கலையும் கனவோ, அழகிய கற்பனையோ?

கறைபட்டது வளர்பிறை உறவு,
துயருற்றது அன்னையெனும் பௌர்ணமி நிலவு
சிறையிட்டது கொடிய நல்குரவு-துக்கப்
பறையாய் கேட்பது பசியின் ஓயாத வரவு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-08-2013

வந்நிய கங்கை

கொரோனாவின் கொடிய ஆக்கிரமிப்பு உலகை உலுக்கிட
வையகமெங்கும் வரலாறு காணாத பொருளாதார
வரட்சி, தனி மனித வாழ்வாதாரமோ
புதைமணலில் சிக்கிய நிகழ்ச்சி

வறுமை சொந்தம் சொல்ல-வாடிய மூத்த சொந்தங்கள்
பிரிவைச் சொல்லி , ஈமச்சடங்கின்றி எங்கோ புதைந்து
மறைந்திட, பூஜைகள் இன்றி பாழ்படும் ஆலயங்கள்
வீட்டுச் சிறையில் கல்லாகும் மானுடங்கள்

களவும் மலிந்த தொழிலாக, குங்குமம் அழிந்த
குலமகளும் புழுதியில் விழுந்த பூச்சரமாக
கற்பும் மலிவு விலையாக, காலம் மாறும்.

மனநோய் வருத்த, வறுமை துரத்த, மரணச் சூழலில்
மானுட வாழ்வு, கனவாய் பழங்கதையாய்
இறை நம்பிக்கையின் சாவு

ஏன் பிறந்தோம் என மனம் சலிக்க, நோய் வருத்த
ஒடுங்கிட்ட ஊர்கள், எரியுண்டு, புதையுண்டு எங்கோ
புதைந்தும். சாம்பலுமான உறவுகள்

முகக்கசவமும்-தனி மனித இடைவெளியும் உறவைப் பிரிக்க
அணைத்து ஆறுதல் சொல்ல இயலாது, ஈமச்சடங்கில்
ஒன்று கூடவும் இயலாது, காதலைச் சொல்லவும் முடியாது
தனிமைத்துயரில் துடிக்கும் ஆதாமின் மனது

முத்தம் பகிரும் இதழை, முகக்கவசம் மூடி மறைக்க
அணைக்கும் இன்பத்தை இடைவெளி அச்சுறுத்த
அலைபாயும் ஏவாளின் காதல் மனது, வல்லரசுகளாலும்
அழிக்க முடியாது திரிபடையும் கொரோனா வைரஸ்

கல்வியும் பாழாக-காக்க முடியாத செல்வமும் செல்லாக்
காசாக-நவீன விஞ்ஞான உலகில்-நாள்தோறும்
பல்லாயிரம் மரணங்கள், தீர்த்த யாத்திரைகளும் ஓய்ந்திட-
ஓயாது தொடரும் கொரோனாவின் மரண யாத்திரைகள்

விகாரமடையும் வைரஸ், விஞ்ஞானத்திற்கு
சவாலாக, நடைப்பிணமாய் மாறிட்ட வாழ்க்கை
நூலறுந்த காற்றாடியான நம்பிக்கை

பனிமலை நின்று, பாயும் கங்கையின் குளிர்மையால்
உயிர் மெய் சிலிர்த்து பரவசம் கொள்ள, அணையாத
சிதைகளின் வெம்மையால்-கங்கையும் கொதித்து-
கடல் நாடி சூடு தணிக்க ஓடிட, கண்கள் பனிக்கும்

உலகெங்கும் நாளும் புது மயானங்கள்
-உயிர்கொல்லியால்
வாழ்வோ மயானமான அவலங்கள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-08-2013

விழியளந்த அழகு

விழியளந்து அழகில் மனம் இலயிக்க
கனிமொழியை மனம் இசை என இரசிக்க
மொழி கடந்த அழகை வர்ணிக்க மனம் தவிக்க
மொழியெடுத்தேன் அழகை கவிதையில் வடிக்க

வேல் விழிகள் என்னை அழைக்க, ஆழி அலைபோல்
மனம் குதூகலிக்க, பால் நிலவோ வானில்
பெண் நிலவோ அருகில், யாழும், குழலும் இவள் மொழியில்
நாணிச் சிவந்த பெண்ணோ என் நெஞ்சில்

இன்பத்துப்பாலிலும் இனிது இவள் அழகு, சுவைத்த விழிகளும்
வியக்க, வெண்பாவிற்கடங்காத பெண்பால், புகழேந்தியும்
பாடாத அழகின் புதுப்பால் மனம் ருசிக்க-ஆடை மூடிய அழகில்
சுட்ட பசும்பால் இரசிக்க வள்ளுவனின் இன்பத்துப்பால்

கார்குழலில் பூவனம், கன்னி மேனியிலோ பூமணம்
பூவையோ யாரும் சூடாத புதுவனம்
காரிகையோ அழகின் அரியாசனம்.

கண்களும் நகையாக-செவ்விதழ் சிரிப்பும்
புன்னகையாக, பூரித்த அழகில் மங்கையோ கங்கை
கண்பட நெஞ்சில் மலர்வதோ உவகை

நுதல் தொட்டு இடைவரை அழகோ மெல்லினம்
இடைதொட்டு பாதம் வரை வல்லினம்
மின்னல் இடையோ புதுவித இடையினம்
மொத்தத்தில் இவளோ தமிழினம்.

உன் நூலிடையில் ஒரு மேகலையாய் என்னைக் கட்டிக்கொள்
உன் பூம்பாதங்களில் கொலுசாய் என்னை மாட்டிக்கொள்
உன் பூங்கரங்களில் வளையல்களாய் போட்டுக்கொள்
உன் கார்குழலில் புதுமலராய் என்னைச் சூடிக்கொள்

உன் கருவிழிகளில் மையாய் பூசிக்கொள், பிறை நுதலில்
குங்குமாய் வைத்துக்கொள், என் சுவாசக்காற்றே
நீயடி, உன் இதயத் துடிப்பாய் நானடி-கலைமகள்
கைப்பொருளே என் காதல் தேவதை நீயடி

மனம் தவமிருக்க, மங்கையோ புன்னகைக்க
என் மனமோ இறகடித்துப் பறக்க, காதலனாய்
வரம் தந்த தேவதை- காதலால் தன்னை
சூடிக் கொடுத்த கோதை

ஆணும் பெண்ணும் ஓதும் அன்பின் வேதம் காதல்
இதயங்களின் அபூர்வ ராகம் காதல், அன்பின்
வேதம் காதல், காதல். காதல். காதல்,
காதல் போயின் சாதல்

மதம், மொழி சாதி, நிறம் கடந்த வேதம் காதல்
காதலுக்கு தெய்வமில்லை
காதலரே தெய்வம்

கண்பார்த்து நெஞ்செழுதும் அன்புக் காவியம் காதல்
மண் பார்த்து மங்கை நீ நாண, கண் பார்த்து நெஞ்சம்
பண் பாட, மண்ணும், நீருமாய் நம்மனம் கலக்க
என்னுயிராய் நீயடி உன்னுயிராய் நானடி

இதயங்கள் இடம் மாறும் இனிய நிகழ்வு காதலடி
காதலில்லாமல் வாழ்வு இல்லை, காதலில்லாத
வாழ்வு சாதலடி, என் இதயம் எழுதிய காதல் கவிதை
கண்ணே, கலைமானே நீயே என் காதலின் கீதை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-08-2013

பூ விழிகள் மொழிந்த காதல்



மையெழுதிய சேல் விழிகளால் மனதைக் கொய்து
கார்குழலில் மலர்களாய் சூடிக்களித்தாள், மதி நுதலில்
ஒரு பொட்டாய் இட்டு, செவ்விதழ்களில் தேனாய்ப் பூசி
நான் பார்க்க, மண் பார்த்து நாணிச் சிவந்தாள் கன்னி

பாவையிவள் பூம்பார்வை பட்டு மனதிலோ காதல் வசந்தம்
விழிகளுக்குள் காதல் ஓவியமாய் அவள் உருவம்
நெஞ்சுக்குள் காவியமாய் கானக்குயிலின் கீர்த்தனம்
இதயத்திலே அழகின் காதல் நர்த்தனம்



விழிகளில்தான் எத்தனை அபிநயங்கள்
செவ்விதழ்களிலோ தேன் சுனைகள்
மௌனத்திலோ கவிதையின் அலைகள்

பார்க்கும் விழிகளால் என் நெஞ்சில் பரவசம்-
பார்த்தும் சலிக்காத பாவையோ-மனதிற்கும்
விழிகளுக்கும் பருகிட இனிக்கும் மதுரசம்

மொட்டழகாய் நாசி-முறுவல் பூக்கும் இதழ்களிலோ
காதலுக்கு ஆசி, செம்மாங்கனிக் கன்னங்களில'
முத்தமழை பொழிய மனமே யாசி
கன்னிராசி இவளைக் காதலாகி நேசி

கிளி கொத்தாத தேன் மாங்கனி காதல் கொய்யாத
கொய்யாக்கனி. கம்பனும் கண்டே சீதை என மயங்குவான்
காளிதாஸனும் சகுந்தலை என்றே கவி பாடுவான்

பூத்த விழிகளால் என்னைப் பொத்தி எடுத்து, பூரித்த
காதலாள் பூ நெஞ்சக்குள், பொக்கிஷமாய் ஒளித்து வைத்து
யாத்த கவிதையை படித்து இரசித்தே-என்னை
ஒரு பூமாலையாய் சூடிய ஆண்டாள்

நெஞ்சமும் தேனாகி, நினைப்பும் அமுதாகி,
மொழியும் கவிதையாகி கண்களால் உண்டு மகிழ்ந்தேன்
என்னை மறந்தே-காதலில் வீழந்தேன்-
காதலே இன்பத்தேன் என மலைத்தேன்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-08-2013

விவசாயி

உழுது விதைக்கும்போது. உழவரும் கோவனத்தாண்டி
மண்ணோடு போராடி, மழைக்காய்த் தவம் வேண்டி
வாழ்வாதாரத்திற்காய் ஓயாத -அவன்
வாழ்க்கைப்போராட்டத்தில் இன்றும் ஆண்டி

மகாத்மாவைப் போற்றிய பாரதம்
மண்ணைப் பொன்னாக்கும் விவாசாயியை
இன்னும் காணாத குருடான துர்ப்பாக்கியம்

நடந்தாய் வாழி காவிரித்தாயின் கால்களுக்கு
கன்னடம் விலங்கிட, நஞ்சையும், புஞ்சையும்
கருகிக் காய்ந்திடும், வானம் பொய்த்து,
வரட்சி பயிர்களை தீய்த்திட வாழ்வே பொய்யாகும்

வாங்கிய கடன் சுருக்கு கயிறாய் மாறிட
வாழ்வாதாரமில்லா ஏழை
தேடும் சுதந்திரம் தற்கொலையாகும்.

உழுது விதைத்த மண்ணிற்கு உயிர் மெய் உரமாக
உழைத்த மாமனிதன் உடலும் பாடையில் போக
கழனியும், புதர் மண்டிக் காடாகித் துயர் சொல்லும்.
செய்தித்தாளின் சிறிய கட்டத்துள் மரணம் செய்தியாகும்.

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-08-2013

யாரடி நீ மோகினி

யாரடி நீ மோகினி?.வேல் விழிகள் நெஞ்சில் பாய
காதல் வலியால்- இதயமும் துடிக்க, ஆடும் பரதத்தில்-
மனமாட காட்டும் அபிநயத்தில் உணர்வுகள் பூத்தாட
முத்துப் புன்னகையால் நெஞ்சைத் தொட்டாய்

பூங்குழலில் மலராய் நானும் சேர, சலங்கை ஒலியில்
கவிதைகள் பிறக்க, வளையல்களின் சந்தத்தில் வசந்தம் பூக்க
ஆடுவது முல்லைக்கொடியோ, அணங்கு வாசமல்லிகையோ
காதல் வாசத்தில் மணக்கும் என் மனது

நாணத்தால் நீ சிவக்க. காதல் கிளி கொத்தாத கன்னியை
மனம் கொத்த-என் மனம் கொத்திடும் காதல் மனங்கொத்தி
நீதானே மனம் வியக்க, மண் பார்த்த அபிநயத்தில்-காதலாகி
என் மனம் வீழ்ந்த மாயம்தான் என்ன மனமோகினி?

கண்களில் ஈரம் நிலைக்க, கவிதைகளில் அவலம் சுவைக்க
நெஞ்சில் ஆறாத காதல் காயம், அழியாத கோலமாய்
உன் வேல்விழிகளின் அபிநயக்கோலம்.

மையெழுதிய விழிகள்-நெஞ்சில்
எழுதிய காதல் மொய்யும் பொய்யானதே
இதழ் விரித்த மலரில் இனிக்கும் தேனருந்தக் கண்ட
காதல் கனவும் கானல் நீரானதே

அழகில் மோகனம், என்னை மயக்கிய
தேவகானம், மாமல்லன் கண்ட சிவகாமி,
கோவலனை மயங்கிய காவிரி மாதவி
நான் மயங்கிய ஊர்வசி எங்கே?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-08-2013

யாரிடம் செல்வோம் இறைவா

கொரோனோ உலகை ஆட்டிப்படைக்க, உயிர்களை
காலன் விரைந்து களவாடிச் செல்ல-விழிகளில்
கண்ணீர் நதிகளின் கோலம்-இதயத்தில்
இமயப் பாரமாய்ச் சோகத்தின் அலங்கோலம்

உலகப் பொருளாதாரம் வீழச்சியுற, ஊர் முடங்கி
-எல்லைகள் மூடி, குடும்பங்கள் தனிமைச் சிறையிருக்க
வாழ்வாதாரம் இழந்த ஏழைகள் வாழ்வோ
பட்ட மரமான துயரம்.

பசியும், பிணியும் தலைவிரித்தாட, மனநலம் குன்றி மானுடம்
அல்லாடக், குலமகள் கற்பும் பசிப்பிணிக்கு அடமானமாகுமோ?
பெணமைம் பேதமின்றி பாலியல் வன்முறைக்கு பலியாகுமோ?

அராஜகம் தலை தூக்குமோ?, சட்டமும், ஒழுங்கும்
நிலை குழைந்து சர்வாதிகாரம் அரசோச்சுமோ?
மானிட விழுமியங்கள் நிலை குலையுமோ?அஞ்சிடும் மனம்
ஆண்டவனை கெஞ்சிடும் தினம் தினம்.

அப்பளம் போட்டு, ஐஸ்பழம் விற்ற தொழில்களும்
அப்பளமாய் நொருங்கி, பனியாய் உருகிட
ஓடும் கண்ணீர் நதிகள்

உப்பளத் தொழிளாலர்-வாழ்வும், உப்பாயச் கசந்திட
ஓயாது ஓடிய சரக்கு வண்டிகள் ஓய்ந்து உறங்கிட
வாழ்க்கை வண்டியும் முடங்கிட
கொரோனாவால் ஒடுங்கிய உலகு

ஆடல் மறந்த ஆலயமணிகள். முடமாகிப் பாடல் மறந்திட
பூஜைகள் இன்றி வாடிடும் ஆலயங்கள் , கூடிக் கூவிய
அதான் குயில்கள் ஓடி ஒளிந்திட-தொழுகைகள் இன்றி
சோரும் பள்ளிவாயில்கள்.

காலையும், மாலையும்
காற்றினில் வந்த பிரித் கீதமும் ஓய்ந்திட
தியானத்தில் மூழ்கிடும் விகாரைகள்

மிருகம், மனிதன், தெய்வம் மாறிடும்
வாழ்வின் மூன்று நிலைகள்.

இறைவனும் மனிதனும், தனி மனித இடைவெளி தாண்டி
விண்ணில் மண்ணில் விலகி நின்ற அவலங்கள்
அர்ச்சனைப் பொருட்களும், மாலைகளும் விற்றுப்பிழைத்த
வியாபாரமும் படுத்திட கும்பி கொதிக்க வாடும் குடும்பங்கள்
மாலையும் வழிபாடுமின்றி, தூசி படிந்த தெய்வங்கள்?

ஊடும் பாவும் ஒன்றொடொன்று இணைய, பண்ணாய் எழுந்து
பாடலாய் ஒலித்த விசைத்தறிகளின் இன்னிசை
ஊமையாகிட, வாட்டும் வறுமையின் இரைச்சல்கள்-
வயிற்றில் தறியடிக்கும் பசியின் உரசல்கள்

திரைகடலோடி திரவியம் தேடிய காலம் கனவாக
கடற்றொழிலும் புயல் அடித்த நிகழ்வாக, வறுமைப் புயலுக்கு
ஒதுங்கிட வழியின்றி, கண்ணீரில் மனம் அலைபாய
துடிக்கும் இரத்தம், பசி போக்க அழைக்கும் கடல் தாயின்
ஓயாத சத்தம், மீனவர் வாழ்வில் மீனுக்கும் பஞ்சம்.

பூந்தோப்பு விவசாயிகளும்-பூ விற்க வழியன்றி-புழு அரித்த
பூக்களாய் கருகி உதிர்ந்திட , பூ மணந்த வாழ்வில்-
பிண நெடியாய், அச்சத்தின் காயம், வறுமையின் நாற்றம்.

முற்றிப் பழுத்த முக்கனிகளும், விற்றுப் பிழைக்க வழியின்றி
விழுந்திட-அணிலும், வௌவாலும், கிளியும் விருந்தாடிக்
களித்திட, மண்ணில் விழுந்தவை கண்டு மனம் குமுறிட
உண்ணவும், பகிரவும் ஆளின்றி விம்மும் மனசு

இரப்பர் பாலும் காய்ந்திட-பறிப்பாறின்றித் தேயிலைக்
கொளுந்துகள் முற்றிட, காய்ந்த வயிறும், முற்றிய வறுமையும்
கண்களில் சோகத்தை வரவழைக்க, நெருப்பை காணாத
அடுப்பங்கரையில், உறங்க மறுக்கும் பூனைகள்-

பசி தீக்கும் வயிற்றில்-உலை வைக்க
பிடி அரிசிக்கு- சுடுகாட்டிலும் பஞ்சம்

கூலிகளாய் நாளும் உழைத்து, கொதிக்கும் வயிறு குளிர
கும்பி நிறைய கூழோ, கஞ்சோ குடித்து, நடை பாதையில்
உறங்கிய காலங்கள் ஆனந்தக் கனவாக, பழஞ்சோறும்,
கஞ்சும், கூழும் கனவிலும் அமுதாகும்

சேரி திரும்பி சேற்றுப் பன்றிகளாய், வறுமையில்
உழன்று, எலியும், பாம்பும் ஏழைகளின் உணவாக
பசி போக்கும் கொரோனாக் காலம் நிஜமாகும்

உலகை அச்சுறுத்தி கொரோனாஆள
உருவில்லா மாயாவிக்கு -நாளும்
ஆயிரமாயிரம் மானுடம் உணவாக
காட்டேறி கெரோனாவுக்கு நாளும் நரபலி

சோதிடத்தின் கணிப்பும், போதகனின் தீர்கதரிசனமும்
பொய்யாக, தீண்டாமையை வேதியரும் உணர்ந்திட
தனி மனித இடைவெளி நீதியானதோ?

விரல் தழுவாது வீணையும் வாட, இதழ் முத்தம் சுவைக்காது
நாதஸ்வரமும் ஊமையாக, மடி அமர்ந்து முழுங்கிய
மேளமும் மௌனத்தில் ஓய்ந்து மூலையில் கிடந்திட
ஓசையிழந்த நாதங்கள், வனப்பிழந்த ஆலயங்கள்

தேரேறி உலா வந்த தெய்வங்களும்
வேர் பிடிக்க கோயில்களில் முடங்கிட
கொடி ஏற்றி விழா எடுத்த கோயில்களும
படி ஏற ஆளின்றி மூடிக்கிடந்த அவலம்

கல்விக்கூடங்கள் மூடிக்கிடக்க நாளைய தலைமுறையின்
எதிர்காலம், கேள்விக்குறியாய் விறைத்து நிற்க
பொன்னான காலங்கள் மண்ணாக
மனதை அரிக்கும் கவலைக் கறையான்கள்

அடுக்கி வைத்த நெல் மூட்டைகள் அநாதையாய் கிடக்க
மழையில் நனைந்து வெயில் காய்ந்து புழு, பூச்சி, எலி-
உண்டு களிக்க, விளை நிலமோ-மழையில் நீராடி, வெயிலில்
காய்ந்து காடு மண்டிட வறுமைக் காட்டில் வாழும் விவசாயி

நெஞ்சில் களையாய் முளைத்து, கண்ணீரில் தளைக்கும் கவலை.
தூக்கு கயிறாய் அச்சுறுத்தும் கடன், விளை நிலமும்
விவசாயிக்கு புதை நிலமாய் மாறிடும் துயரம்?

பாலும், தயிரும், நெய்யும் விற்ற காலம் பண்டைக்காலமாக
கன்றும் குடித்து களிக்க பால் மடி கறவாது கனக்க,
தாய் பசு கதறி அழைக்க பாலூற்றாது மடியும் உறவுகள்
பாடை சுமக்க ஆளின்றி எரியும் கனவுகள்.

இருளில் ஓய்ந்து-ஒளியில் விழித்து, இருளும் ஒளியும் இசைந்தாட
இன்னிசையாய் தொடர்ந்த வாழ்வில்-தொழிலிழந்து
வறுமை ஆட்கொள்ள பசியும், பிணியும் உயிரச்சமும்,
மனநோயும் மானுடத்தை அலைக்கழிக்கும் கொடுங்காலம்

உயிர்க்கொல்லி கொரோனா
உலகை அச்சுறுத்தும் இருண்ட யுகம்
என்று மாறுமோ? இறைவா
இயல்பு வாழ்க்கை என்று திரும்புமோ?

யாரிடம் செல்வோம் இறைவா, வாழ்வு
தரும் வார்த்தையெல்லாம் உம்மிடமே
தனி மனித இடைவெளி தாண்டி,
மண்ணில் நான்
விண்ணில் நீ இருக்க, உனக்கும்
கொரோனா தானோ?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-08-2013

யாரிவள் தேவதை

நெற்றிப்பொட்டும், நீள்விழிகளும் மையல் சொல்ல
கார்குழல் வெண்மலர்கள் காதல் வாசம் சொல்ல-
கைவளை குலுங்கி, சிலம்போடு காதல் கட்டியம் சொல்ல

மெய் அரும்பிச் சிலிர்க்க, விழி அரும்பி பூவாய் சிரிக்க
இதழ் அரும்பி புன்னகை பூக்க நாணம்
அரும்பி நங்கை சிவக்க, காதல் அரும்பி-என் மனம்
கனிந்த மாயம்தான் என்னே?

விழி தழுவி நான் ருசிக்க- நாணிச் சிவந்து
மண் பார்த்து இரசித்த நங்கை, என்னைத் தழுவ
மாலையிட்ட அழகின் கங்கை
வாழ்வைப் பூவனமாக்கிய நங்கை

வானாகி நின்றேன்-முழுமதியாய் ஒளிர்ந்தாள்
வளியாகி நின்றேன் சீதளமாய்க் கலந்தாள்
மண்ணாகி நின்றேன் மழையாகி கலந்தாள்
கடலாகி நின்றேன் அலையாகி ஆடி மகிழ்ந்தாள்

மலராகி நின்றேன் வண்ணமும் வாசமும் தந்தே
நெஞ்சில் சூடி மகிழ்ந்தாள், வீணையாகி நின்றேன்
நாதமாய் கலந்தாள், காதலாகி நின்றேன்
காதல் தேவதை தாரமாய் தன்னைத் தந்தாள்

கம்பனும் பாடாத கவிதையிவள்
வள்ளுவன் காணாத காதல் அமுதும் இவள்
காளிதாஸன் பாடாத சிந்து இவள்
வெண்பாவுக்கள் அடங்காத ரதி,
பாரதி பாடாத கவி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-08-2013

யாரோ இவள் தேனோ?

நூலிடை கண்டு கண் மயங்க, காதல் தேனடை
என மனம் ருசிக்க, யாரிவள் தேவதை என மனம் தவிக்க
விரிந்தாடும் பூஞ்சடையோடு-மனம் ஆட
என்னை ஆட்டுவித்த காதலின் சீதளமோ பூவாடை

இதழ் விரித்த வண்ணப் பூவை,
கண் ஜாடையால் காதல் சொன்ன அழகில்
கம்பனும் சொல்லாத காதல் கவிதை



மனம் கிறங்க தென்றலில் வரும் சுகந்தத்தில்
இவளோ மலர்வனம் , குடையென விரிந்த பூங்குழலில்
மல்லிகைப் பூவனம், காமன் படை கொண்ட அழகில்
கன்னியோ பாரியும் காணாத முல்லை இனம்

விழி தழுவும்போதுதெல்லாம்-நெஞ்சில்
காதலின் சாரல்-கவிக்குயிலின் மொழி
கேட்கும்போதெல்லாம் -நெஞ்சுக்குள்ளே
காதல் மழையின் தூறல்.

மனமெல்லாம் அவளாக, மனம் நிறைக்கும்
மணமும் பூவாக, நெஞ்செல்லாம் காதலின் நறுமணம்
இவளோ காதலின் பிருந்தாவனம்.

பரதத்தை கயல் விழிகளின் அசைவினில் பரதமுனியும்
கற்றானோ இவளிடம், கவி பாடக்-கம்பனும்
தமிழை வரமாய் பெற்றானோ கன்னியிடம்? மனம் மயங்க
தித்திக்கும் முத்தேவியர் அழகாயப் பூவை

விழிகாண வேற்புருவங்கள், வியந்து சிவக்கும்
இதழ்களுள் பாற்கடலின் அமுதங்கள்-வட்ட நிலவால்
பிறை நுதலில் பொட்டு வைத்து, வாசச்சந்தனத்தால்
வடித்த தேகத்தில் அழகின் அதிசயங்கள்

பார்த்த விழிகள் பரவசத்தில் நிலைத்திட, இதயம்
காதலாகித் துடித்திட, காதலின் காந்தப்புலம்.
காமத் தீ கடந்து, காதல் தீயல் நான் குதூகலிக்க
இதயம் யாக்கும் காதல் வேள்வித் தீயாய் இவள்

நெஞ்சில் பொங்கும் புதுப்புனலோ பன்னீர்
விழிகளிலோ ஆனந்தக் கண்ணீர்
இவள் இல்லையென்றால் துடிக்கும்
இதயத்தை தீய்ப்பதோ கொதிக்கும் வெந்நீர்

என் எண்ணங்களும் நீயாகி. என் வண்ணங்களும்
உனதாகி, என் கனவுகளில் ஆயிரம் இதழ் தாமரையடி
நான் நூற்காத தவத்திற்கு-கன்னியே
காதல்-நீ தந்த வரமடி

பூவாடை வீசும் பெண் மனதில் காதலின் நறுமணம்
மனம் இணைந்த திருமணத்தில் நாளும் புதுமணம்
மணந்தவள் மனதினிலோ-காதலோ
மணக்கும் வாசச்சந்தனம்

மணந்தே வியக்கும் என் மனதில் திருமண வாழ்வோ
பிருந்தாவனம், என்னவள் இதழ் கள்ளிலோ
திகட்டாத அமுதின் குணம் என் மனதிலும் இவள் மணம்
காதலின் வற்றாத நறுமணம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-22-08-2013